மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, இராணிப்பேட்டை

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், இராணிப்பேட்டை

காணாமல் போன குழந்தைகள் மீட்டெடுப்பு மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக காவல் நிலையங்களில் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் தேர்வு - அறிவிப்பு

(Selection of Para Legal Volunteers in Police Stations for missing children and other offences against children)

தேதி: 08.04.2026

******

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Bachpan Bachao Andolan Vs Union of India and Others என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படியும், தமிழ்நாடு அரசின் G.O.(Ms)No.130, Dated:12.03.2026 உத்தரவுபடியும் மாண்புமிகு தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் 25.03.2026-ம் நாளிட்ட உத்தரவின் படியும் மற்றும் தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் படியும், இராணிப்பேட்டை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் இராணிப்பேட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் ஆற்காடு, வாலாஜாப்பேட்டை, சோளிங்கர் மற்றும் அரக்கோணம் ஆகிய வட்ட சட்டப்பணிகள் குழுக்களுக்கும், குழந்தை தொழிலாளர் முறை மற்றும் குழந்தைகள் கடத்தலுக்கு எதிரான குற்றங்களிலிருந்தும், கொத்தடிமைத்தனத்திலிருந்தும் காணாமல் போன குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மறு வாழ்வு அளித்து கல்வி கற்பிப்பதன் மூலம் குழந்தை நட்பு சமுதாயத்தை உருவாக்க (30 முதல் 40 வரை) “சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் (Para Legal Volunteers)” தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

மேற்படி இப்பணி சட்டதன்னார்வர்களுக்கான கடமை மற்றும் சேவை மட்டுமேயாகும். இது நிரந்தர பணிக்கானதல்ல, முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டும் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

PLV-ஆகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தேவைப்படும் குறைந்த பட்ச கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு (Plus Two) ஆகும். வயது வரம்பு 25 முதல் 65 வயது வரை ஆகும். பட்டதாரிகளுக்கும், சமூகப் பணி, உளவியல் அல்லது அதுசார்ந்த பிற துறைகளில் தகுதி பெற்றவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலும், இராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களுக்கு கீழ்க்காணும் பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. திருநங்கைகள்

2. சமூக சேவை செய்யும் சமூக ஆர்வலர்கள்

3. ஆசிரியர்கள் (ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் உட்பட)

4. அங்கன்வாடி பணியாளர்கள்

5. உளவியலாளர் (மனோதத்துவ நிபுணர்)

6. ஆளுறு பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்

7. ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் (சட்ட மாணவர்கள்)

8. மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழுவில் பணிபுரிகின்ற தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்.

அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

சட்டத் தன்னார்வலர்கள் ஆரம்பத்தில் ஓராண்டு காலத்திற்குப் பட்டியலிடப்படுவார்கள் அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில், DLSA - வின் தலைவரின் பரிந்துறையின் பேரில் இக்காலம் மேலும் நீட்டிக்கப்படலாம்.

சட்டத் தன்னார்வலர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகளாக பின்வருவன அவர்களின் கடமைகளாகவும் பொறுப்புகளாகவும் அமையும்

- விசாரணையின் போது உதவுதல்
- மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களைப் பெறுதல்
- காவல் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- மீட்கப்பட்ட குழந்தைக்கு பிந்தைய கால ஆதரவு அளித்தல்
- நலத்திட்ட உதவிகள் கிடைப்பதற்கு உடனிருந்து வழிவகை செய்தல்

சட்ட தன்னார்வலருக்கான பணி :

காணாமல் போன குழந்தை தொடர்பான வழக்கு அல்லது குழந்தைகளுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்கு ஏதேனும் பதிவாகும்போதெல்லாம், காவல் நிலைய ஆய்வாளர் (SHO) அல்லது காவல் நிலைய எழுத்தர், DLSA/TLSC-க்குத் தகவல் தெரிவிக்கும் பட்சத்தில் ஒரு சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டரை (PLV) காவல் நிலையத்திற்கு அனுப்பி, புகார்தாரருக்கோ அல்லது பாதிக்கப்பட்டவருக்கோ உதவ ஏற்பாடு செய்யும்பொழுது சட்ட தன்னார்வ தொண்டரானவர் வழக்கு தொடர்பான நடவடிக்கையில் பாதிக்கப்பட்ட நபர் அல்லது குழந்தைக்கு உதவிபுரிதல்.

காணாமல் போன குழந்தைகள் தொடர்பான வழக்குகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பிறகுற்றங்கள் தொடர்பான விவரங்களை, காவல் நிலைய ஆய்வாளர் (SHO), சூழலுக்கு ஏற்ப DLSA-க்கோ அல்லது TLSC-க்கோ உடனடியாக வழங்கும் பொழுது, அது தொடர்பாக தகவல் தெரிவிக்கும் பொழுதெல்லாம், அவ்வழக்கு தொடர்பான தகவல்களை சேகரிக்க புகார்தாரர் அல்லது குழந்தைக்கு உதவி புரிதல்.

சட்டத் தன்னார்வலர்கள், மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தின் செயலாளரிடம் மாதந்தோறும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

சட்ட தன்னார்வலர்களின் மதிப்பூதியம் :

சட்டத் தன்னார்வலர் ஒருவருக்கு, ஒவ்வொரு வருகைக்கும் ரூ.1,000/- வீதம் மதிப்பூதியம் பெற உரிமை உண்டு: எனினும், ஒருவழக்கிற்கு அதிகபட்சமாக ரூ.5,000/- என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டே இத்தொகை வழங்கப்படும்.

மேலும் தகவல்களுக்கு :

மேற்குறிபிடப்பட்டுள்ள பிரிவினர்களில் சட்ட தன்னார்வ தொண்டராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை **https://ranipet.dcourts.gov.in** என்ற இராணிப்பேட்டை மாவட்ட நீதிமன்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, **பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் 24.04.2026 - ஆம் தேதி மாலை 05.30 மணிக்குள் இராணிப்பேட்டை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகத்தினை வந்தடையும்படி பதிவு தபால் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்**. மேற்படி கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தேர்வு:

நேர்காணல் மூலம் தகுதியான நபர்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

நேர்காணல் தேதி, நேரம் மற்றும் இடம், நேர்காணலுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் விபரம், தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரர்களின் விபரம் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் விவரங்கள் அனைத்தும் **https://ranipet.dcourts.gov.in** என்ற இராணிப்பேட்டை மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

குறிப்பு: மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் இல்லை. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணி தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும். நிரந்த பணியென கருத இயலாது. மேலும் விபரங்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு (அ) வட்ட சட்டப் பணிகள் குழக்களை நேரில் அணுகலாம்.

/ஒப்பம் /
செயலாளர்/சார்பு நீதிபதி,
மாவட்டசட்டப்பணிகள் ஆணைக்குழு,
இராணிப்பேட்டை

/ஒப்பம் /
தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
இராணிப்பேட்டை.

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, இராணிப்பேட்டை

சட்ட தன்னார்வ தொண்டராக விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்

1. மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக் கூலி ஏதும் இல்லை.
2. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும், நிரந்தர பணியென கருத இயலாது.
3. மேற்கண்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள், விண்ணப்பங்களை இராணிப்பேட்டை நீதிமன்றத்தின் இணையதளமான **https://ranipet.dcourts.gov.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, விண்ணப்பத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் 24.04.2026 - ஆம் தேதி மாலை 05.30 மணிக்குள் பதிவுத்தபால் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,இராணிப்பேட்டை – 632 401
5. விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி 24.04.2026 மாலை 05.30 மணி அதற்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
6. கீழ்க்குறிப்பிட்ட சுய சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

1	பிறந்த தேதி மற்றும் வயதுக்கான சான்று	பிறப்பு சான்றிதழ் S.S.L.C / H.S.C சான்றிதழ்
2	ஜாதி சான்று	தகுதிவாய்ந்த அலுவலரால் வழங்கப்பட்ட ஜாதி சான்று
3	கல்வித் தகுதி	H.S.C / Degree / Diploma சான்றிதழ்கள்
4	இதர கல்வித் தகுதி	ஏதேனும் இருப்பின் அதற்கான சான்றிதழ்கள்
5	நிரந்தர முகவரிக்கான சான்று	வாக்காளர் அடையள அட்டை, ஆதார் அட்டை, குடும்ப அட்டை, பாஸ்போர்ட் (இவற்றில் ஏதேனும் ஒன்று)
6	அனுபவ சான்றிதழ்கள்	ஏதேனும் இருப்பின் அதற்கான சான்றிதழ்கள்

7. மேலும் விவரங்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட சட்டப்பணிகள் (அ) வட்ட சட்டப்பணிகள் குழுக்களை நேரில் அணுகலாம் அல்லது **https://ranipet.dcourts.gov.in** என்ற இராணிப்பேட்டை நீதிமன்றஇணையதளத்தையும் பின்பற்றலாம்.

/ஒப்பம் /
செயலாளர்/சார்பு நீதிபதி,
மாவட்டசட்டப்பணிகள் ஆணைக்குழு,
இராணிப்பேட்டை

/ஒப்பம் /
தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
இராணிப்பேட்டை.

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, இராணிப்பேட்டை

சட்ட தன்னார்வ தொண்டர்களாக பணிபுரிவதற்கான விண்ணப்ப படிவம்

புகைப்படம்

1	விண்ணப்பதாரரின் பெயர்	:	
2	தந்தை/கணவர்பெயர்	:	
3	பாலினம்	:	ஆண் / பெண் / மூன்றாம் பாலினத்தவர்
4	பிறந்த தேதி மற்றும் வயது (சான்றிதழை இணைக்கவும்)	:	
5	கல்வித் தகுதி (சான்றிதழை இணைக்கவும்)	:	
6	சாதி (சான்றிதழை இணைக்கவும்), இனம், மதம் மற்றும் தாய்மொழி	:	
7	நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி	:	
8	இதற்கு முன் தன்னார்வ சட்டப் பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்)	:	

9	திருமண நிலை	:	
10	காவல் துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம்	:	
11	தாங்கள் எந்தப் பகுதியில் சட்டதன்னார்வலராக பணிபுரிய விரும்புகிறீர்கள் (டிக் செய்யவும்)	:	இராணிப்பேட்டை ஆற்காடு வாலாஜாப்பேட்டை சோளிங்கர் அரக்கோணம்

12. கீழ்கண்ட எந்த பிரிவின் கீழ் விண்ணப்பிக்கிறீர்கள் (அதற்கான சான்றிதழை இணைக்கவும்)

வ.எண்	**பிரிவுகள்**	**விண்ணப்பிக்கும் பிரிவு**
1	திருநங்கைகள்	
2	ஆசிரியர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)	
3	ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள்	
4	உளவியலாளர் (மனோதத்துவ நிபுணர்)	
5	MSW Students & Teacher - பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்	
6	அங்கன்வாடி பணியாளர்கள்	
7	மருத்துவர்கள் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சட்டமாணவர்கள்	
8	அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்க பிரமுகர்கள்	

மேற்கூறிய அனைத்து தகவல்களும் உண்மை என சான்றளிக்கிறேன். உரிய சான்றிதழ்களின் நகலை இணைத்துள்ளேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்:

இடம்: